# ஜூன்



# 6. இரக்கத்தின் பாதை

## முன்னுரை

ஜூன் மாதம் என்பது இயேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு உன்னதமான மாதம். இயேசுவின் திரு இருதயம் என்பது இரக்கத்தின் பிறப்பிடம், கருணையின் உறைவிடம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கூற்றுப்படி இரக்கம் என்பது கடவுளின் திருநாமம். நாம் பாவிகளாய் இருந்தபோதே தம் திருமகன் வழியாக நம்மை மீட்டெடுத்த தந்தையிடம் நாம் காண்பது நிபந்தனையற்ற இரக்கத்தைத்தான். நாம் இன்றும் இந்த உலகில் இருப்பதும் இயங்குவதும் இறைவனின் இரக்கத்தால்தான். இறைவனின் இரக்கத்தை அனுபவித்து வரும் நாம், பிறர் மட்டில் இரக்கம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பது தான் இயேசுவின் விருப்பம். அதுவே அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கிற அறிவுரையும்கூட. “உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்.” (லூக். 6:36). இன்றைய திருச்சிலுவைப்பாதை இறைவன் நம்மீது கொண்டுள்ள இரக்கத்தை உணர்த்துகிற அதே சமயத்தில் நாம் மற்றவர்கள் மீது காட்டவேண்டிய இரக்கத்தின் அவசியத்தையும் உணர்த்துவதாக அமைகிறது. சிறுவயதில் மறைக்கல்வி வகுப்புகளில் பயின்ற உடல் சார்ந்த, மற்றும் ஆன்மா சார்ந்த இரக்கத்தின் செயல்கள் பதினான்கையும் இந்தப் பதினான்கு தலங்களில் தியானிப்போம் வாருங்கள்.

◆

### ✦ முதல் நிலை

**“சிறைப்பட்டவர்களோடு நீங்களும் சிறைப்பட்டிருப்பதாக... நினைத்துக் கொள்ளுங்கள்.” (எபி. 13:3)**

## ஒரு கைதியாய் இயேசு

பிலாத்துவின் முன் ஒரு கைதியாய் நிற்கும் இயேசு பேசுகிறார்:

என் மகனே! மகளே! எப்போதாவது நீ ஒரு சிறைக் கைதியை சந்தித்ததுண்டா? அல்லது அவர் குடும்பத்தாரையாவது சந்தித்ததுண்டா? இப்படிப்பட்ட எண்ணமாவது உனக்கு ஏற்பட்டதுண்டா? குறைந்தபட்சம் அவர்களுக்காக நீ செபித்ததாவது உண்டா?'' உன் பங்குத் தளத்திலோ, மறை மாவட்ட அளவிலோ செயல்படுகிற சிறைப்பணி அமைப்பிற்கு பொருளுதவியாவது செய்ததுண்டா? சிறைக் கைதிகள் மீதும், அவர்கள் உறவினர் மீதும் ஏதாவது ஒரு விதத்தில் அக்கறை செலுத்தியதுண்டா? சிறைக்கைதிகள் இருக்கட்டும்; உனது முன் முடிவுகளாலும், தீர்ப்பிடும் குணத்தினாலும் உன் மனதிலேயே சிறைப்பிடித்து வைத்திருக்கிறாயே எத்தனையோ பேரை! அவர்களை எப்போதாவது பொறுமையோடும் புரிந்துகொள்ளும் மனநிலையோடும் சந்தித்து, அவர்கள் பக்கம் உள்ள நியாயத்தைக் கேட்க முயற்சி செய்திருக்கிறாயா?

உன் மனதில் எழும் எண்ணம் எனக்குக் கேட்கிறது. ``அவர்கள் சிறையில் இருக்கிறார்கள் என்றால், அது அவர்கள் செய்த குற்றத்திற்கான தண்டனை; அனுபவித்துத்தான் தீர வேண்டும்'' என நீ நினைக்கிறாய். ஆனால் ஒன்றைப் புரிந்து கொள். சிறையில் இருப்பவர்கள் எல்லாம் உண்மையான குற்றவாளிகள் அல்ல. ஏன், இந்தத் தலத்தில் என்னையே எடுத்துக்கொள். குற்றமே செய்யாத நான் தான் பிலாத்துவின் முன் குற்றவாளியாக நிறுத்தப்படுகிறேன். என்னைப் போலவே சிறையில் இருக்கும் பலபேர் நிரபராதிகள்தாம். ஒருவேளை அவர்கள் குற்றவாளிகளாகவே இருக்கட்டும். ஒரு கிறிஸ்தவனாகிய நீ எப்படி அவர்களை வெறுக்கவோ, ஒதுக்கவோ முடியும்? நானோ, என் தந்தையோ நீதியின்படி தீர்ப்பிட்டால் உன் நிலை என்ன என்பதை ஒரு நொடி யோசித்துப்பார். பாவியாகிய உன்னை பரிசுத்தரான நான் தேடி வந்து சந்தித்ததோடு நில்லாமல், உனக்காக உயிரையும் கொடுத்ததை நினைத்துப்பார். சிறைப்பட்டோரை சந்திக்க முயற்சி செய். அதே நேரம், உன்னுடைய முன் முடிவுகளிலிருந்தும் பிடிவாதமான அபிப்ராயங்களிலிருந்தும்

மற்றவர்களை விடுவி. எல்லோருக்கும் சுதந்திரமாகவும் மாண்புடனும் வாழ உரிமை உண்டு.

## செபம்

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை உள்ளத்தை எனக்குத் தந்தருளும்.

◆

## ✦ இரண்டாம் நிலை

**“பொறுமையாயிருங்கள். எவரும் தீமைக்குப் பதில் தீமை செய்யாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.”**

**(1. தெச. 5:14,15)**

# தாங்கிக் கொள்கிற இயேசு

தம்மீது சுமத்தப்பட்ட சிலுவையெனும் தீமையை பொறுமையுடன் தாங்கிக் கொள்ளும் இயேசு பேசுகிறார்:

என் மகனே! மகளே! தீமைகளை பொறுமையுடன் தாங்கிக்கொண்ட அனுபவம் உனக்கு இருக்கிறதா? “தீமைகளை பொறுமையோடு தாங்கிக் கொள்ளுதல்” என்பது உளம் சார்ந்த இரக்கச் செயல் என்கிற மறைக் கல்விப்பாடம் நினைவில் இருக்கிறதா? சட்டென்று வரும் உன் பதில் எனக்குக் கேட்கிறது. “நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை; செய்யாத குற்றத்திற்காக நான் ஏன் துன்புற வேண்டும்? எனக்கு அநியாயமாய் இழைக்கப்படும் தீமையை நான் ஏன் பொறுத்துக்கொள்ள வேண்டும்?” எனக் குமுறுகிறாயே! இந்தத் தலத்தில் என்னைப்பார். செய்யாத குற்றத்திற்காகத் தான் நான் சிலுவை சுமக்கிறேன். அந்தச் சிலுவையால் மீட்கப்பட்ட நீ என் சீடனென்றால் தீமைகளை பொறுத்துக் கொள்ளப் பழகித்தான் ஆக வேண்டும்.

தீமைகளைத் தாங்கிக் கொள்வது கோழைத்தனம் என்று ஏன் நினைக்கிறாய்? உண்மையில் பார்த்தால் அது தான்

புத்திசாலித்தனம். நாய் குரைக்கிறது என்பதால் திரும்பக் குரைப்பது மனிதனுக்கு அழகா என்ன? எதார்த்தமாய் யோசித்துப் பார். நீ கோபப்பட்டு, தீமைக்கு தீமையால் பதிலடி கொடுக்க நீ எத்தனிக்கிறபோது, உன் மன அமைதியை இழக்கிறாய் உனது இரத்த அழுத்தம் எகிறுகிறது. உன் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. குடும்பங்களில் நிகழும் சிறுசிறு விஷயங்களை பொறுமையோடு தாங்கிக்கொள்ள கணவனும் மனைவியும் மறுப்பதால்தான் அவை பெரிய மோதல்களாகி சில நேரங்களில் விவாகரத்தில் கூட போய் முடிகிறது. ஒன்றைப் புரிந்து கொள். தீமைகளை பொறுமையோடு தாங்கிக் கொள்ளாமல் நீ சீறுகிறபோது முதல் பாதிப்பு உனக்கும், உன் உடல்நலனிற்கும் இரண்டாவது பாதிப்பு உறவுக்கும், குடும்ப அமைதிக்கும்.

என்மீது இழைக்கப்பட்ட மிகப்பெரும் தீங்காகிய சிலுவை மரணத்தைக்கூட என் பொறுமையால் அருள் தரும் சாதனமாக மாற்றிய என்னைப்போல் தீமையை பொறுமையுடன் தாங்கப் பழகு. அப்போது அருளும் அமைதியும் உனக்கும் வாய்க்கும், பிறருக்கும் கிடைக்கும்.

**செபம்**

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை உள்ளத்தை எனக்குத் தந்தருளும்.

◆

## ✦ மூன்றாம் நிலை

**“பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பது... அன்றோ நான் விரும்பும் நோன்பு.” (எசா 58:7)**

# பசித்திருக்கும் இயேசு

உடல் பசியால் வலுவிழந்து முதன்முறை விழுந்த இயேசு பேசுகிறார்:

என் மகனே! மகளே! வழியோரங்களில் விழுந்து கிடப்போரை நீ கவனித்திருக்கிறாயா? வாட்டுகிற பசியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் ஒட்டிய வயிற்றுடன் சாலையோரங்களிலும், தெரு முனைகளிலும் சுருண்டு கிடப்பவர்களை என்றைக்காவது கனிவோடு அணுகியிருக்கிறாயா? பசித்தோருக்கு எப்போதாவது உணவளித்தது உண்டா? "பசித்தோருக்கு உணவளித்தல்" என்பது உடல்சார் இரக்கச் செயல்களுள் ஒன்று. அது குறித்து, நான் உன்னிடம் இறுதித் தீர்வையின்போது கேள்வி எழுப்புவேன் என்பதை மறவாதே!

சிலுவைப் பாதையின்போது நான் கீழே விழுந்ததற்கு பசியும் ஒரு காரணம். என்னைக் கைது செய்த நேரம் முதல் என்னை ஆளுநரிடமும், ஏரோதிடமும், தலைமைக் குருவிடமும் இழுத்துச் செல்வதில்தான் அவர்கள் குறியாய் இருந்தார்கள். நான் ஒருவாய் உணவுகூட அருந்தவில்லை. அதை அவர்கள் யாரும் கருத்தில்கூட கொள்ளவில்லை. பசியும், சோர்வும், சிலுவையின் பளுவும் சேர்ந்துதான் என்னை நடக்க முடியாமல் கீழே தள்ளின.

என்னைப் போலவே, தங்கள் வாழ்க்கையில் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாமல் பலர் வாடுகின்றனர்; பசி அவர்களை மேலும் பலவீனப்படுத்துகிறது. அவர்களுக்கு உணவளிப்பது கிறிஸ்தவனாகிய உனது கடமை. எல்லா நாட்களிலும் இல்லையென்றாலும், உன்னுடைய பிறந்த நாள், திருமண நாள், பண்டிகை நாள் போன்ற சுப நாட்களிலாவது பசித்தோருக்கு உணவு பரிமாறு. சின்னஞ்சிறிய அவர்களுக்கு நீ பரிமாறுகிற உணவு, சிறப்பு விருந்தினர்களுக்கு நீ படைக்கும் அறுசுவை உணவைவிட பன்மடங்கு மதிப்புமிக்கது என் பார்வையில். எனவே, பசித்திருப்போரை பரிவோடு பார்க்கப் பழகு; அவர்களுக்கு உணவு பரிமாறு; கூடவே அன்பும், கனிவும் நிறைந்த வார்த்தைகளையும் பரிமாறு.

## செபம்

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

**“மனத் தளர்ச்சியுற்றவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள்; வலுவற்றோர்க்கு உதவுங்கள்.” (1.தெச. 5:14)**

# ஊக்கமளிக்கும் மரியா

இயேசுவின் சிலுவைப் பயணத்தில் உடன் பயணித்து ஊக்கமளித்த மரியா பேசுகிறார்:

என் மகனே! மகளே! சோர்ந்து போன யாரையாவது நீ சந்தித்து நம்பிக்கை ஊட்டியதுண்டா? சோகத்தில் தள்ளாடும் யாருக்காவது நீ சாய்வதற்குத் தோள் கொடுத்ததுண்டா? “ஐயமுற்றோரை ஆற்றுப்படுத்துதல்” என்பது ஓர் “உளம் சார் இரக்கச் செயல்” என்பதை நினைவில் கொள்.

கல்வாரி நோக்கிய பயணத்தில் என் மகன் சந்தித்ததெல்லாம் அவமானங்களும் அவதூறுகளும்தான்; நிந்தைகளும் கொடுமைகளும்தான். “மகனே! சோர்ந்து போகாதே; ஐயம் வேண்டாம்; நீ செல்வது தந்தை உனக்குக் குறித்துள்ள வழியில்; சற்றும் கலங்காதே” என என் கண்களாலேயே இயேசுவுக்கு உறுதியளிக்க நான் விரைந்தேன். என் மகனுக்கு ஆறுதல் மொழியோ, ஆற்றுப்படுத்துதலோ தேவையில்லை என்றாலும் நான் உடன் பயணிக்கவும், ஊக்கமளிக்கவும் விரைந்தேன்.

சவால்களும் போட்டிகளும் நிறைந்த இன்றைய உலகில், தோல்வியை சந்திக்கும் சிலர் “வீழ்ந்ததும் போதும்; வாழ்ந்ததும் போதும்” எனத் தற்கொலை செய்யக்கூட துணிந்து விடுகின்றனர். நம்பிக்கையிழந்த அவர்களை அடையாளம் காண முயற்சி செய். சில சமயங்களில் அவர்கள் உனக்கு மிக அருகில்கூட இருக்கலாம். கல்வியில் தேர்ச்சி பெற முடியாமல், விரும்பிய வேலை கிடைக்காமல், எதிர்காலக் கனவுகள் சிதைந்தவர்களாய் உன் வீட்டில் கூட வளரிளம் பருவத்து பிள்ளைகள் இருக்கலாம். அவர்களை ஆற்றுப்படுத்து; மருத்துவரீதியாக அல்ல, மனரீதியாக. ஒரு

சின்னப் புன்னகையைத் தந்து, அவர்கள் தோள்களை தட்டிக் கொடுத்து, உற்சாகமூட்டும் வார்த்தையைச் சொல்லி, கூடவே நல்ல அறிவுரைகளையும் நல்கி அவர்களை திடப்படுத்து. அதுவே மிகப்பெரிய உந்துதலாய் அவர்களுக்கு அமையும்; நான் விரும்பும் இரக்கச் செயலாகவும் இருக்கும்.

### செபம்

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

◆

## ✦ ஐந்தாம் நிலை

**“வலுவற்றவர்களின் குறைபாடுகளைத் தாங்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.” (உரோ. 15:1)**

# நலிந்தவராய் இயேசு

சீரேன் ஊரானாகிய சீமோனின் உதவி தேவைப்படுகிற அளவுக்கு உடல் நலிந்துபோன இயேசு பேசுகிறார்:

என் மகனே! மகளே! உதவி தேவைப்படுகிற நலிந்தோரை நீ ஏன் கண்டுகொள்வதே இல்லை. நான் குறிப்பிடும் உதவி பொருளாதார உதவியல்ல; அடிப்படை மனிதநேய உதவிகளை. தங்கள் படுக்கையிலிருந்து எழ முடியாத முதியவர்களுக்கு, படியேற முடியாமல் தவிக்கும் பெரியவர்களுக்கு, தட்டுத்தடுமாறுகிற, உடல்நலம் குன்றியவர்களுக்கு நீ உதவிக்கரம் நீட்டியிருக்கிறாயா? “நோயுற்றவர்களை சந்தித்தல்” என்பது உடல்சார் இரக்கச் செயல்களில் ஒன்று என்பதை மறந்து விடாதே.

உன் குழந்தைப் பருவத்தையும், வளர்ந்து வந்த பாலப் பருவத்தையும் நினைத்துப்பார். உன்னைத் தூக்கிச் சுமந்த பெற்றோர்கள் இப்போது உடல் நலிந்து இருக்கக்கூடும். நோய்களோடும், பணிகளோடும், இயலாமையோடும்,

முதுமையின் முடியாமையோடும் அவர்களும் சரி, மற்றப் பெரியவர்களும் சரி போராடிக் கொண்டிருக்கலாம். நோய் என்பதே ஒரு கொடுமை. தனிமை அதனை மேலும் கொடியதாக்கிவிடும். ஒரு உறவினர் அல்லது நண்பரின் சந்திப்பு நோயுற்றவர்களுக்கும், மூப்பெய்தியவர்களுக்கும் பெரும் ஆறுதலைத் தரவல்லது. நான் சிலுவைப் பாதையின்போது நலிவுற்றுத் தவிக்கையில் எனக்கு உதவி செய்த சீமோன் இன்றளவும் நினைவு கூறப்படுகிறான். உன்னுடைய சந்திப்பும், உதவியும் நோயுற்றவர்களால் மட்டுமல்ல, என்னாலும் என்றென்றும் நினைவு கூறப்படும். நோயுற்றோரை சந்திக்கும் நற்பழக்கத்தை ஏற்படுத்திக்கொள். அதனை உன் வீட்டில் நோயுற்றும், முதுமை அடைந்தும் இருப்போரிடமிருந்தே தொடங்கு. இரக்கச்செயல் உன் இல்லத்தில் இருந்தே தொடங்கட்டும்.

**செபம்**

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

◆

## ✦ ஆறாம் நிலை

**“நான் மனமாறி விடடேன் என்று சொல்வாரானால் அவரை மன்னித்து விடுங்கள்.” (லூக். 17:4)**

## உருக்குலைந்த இயேசு

வெரோனிக்காவைப் பதறவைத்த உருக்குலைந்த முகத்துடன் இயேசு பேசுகிறார்:

என் மகனே! மகளே! உன் முகம் எப்போது பொலிவை இழக்கிறது தெரியுமா? நீ எப்போது கோரமாய் தோற்றமளிக்கிறாய் தெரியுமா? ஒப்பனையில்லாமல் இருக்கும்போதோ, சோர்ந்திருக்கும்போதோ அல்ல. மன்னிக்க மனமில்லாமல்,

பழி வாங்கும் எண்ணத்தோடு நீ கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் போதுதான் உன்முகம் விகாரமாய்த் தோன்றுகிறது. வெறுப்பை உமிழ்கின்ற உன் முகத்தில் அருளுக்கும் இடமில்லை; அழகுக்கும் இடமில்லை. பிறரது குற்றங்களை நீ மன்னித்ததுண்டா? "பிறரது குற்றங்களை மன்னித்தல்" என்பதும் உளம் சார்ந்த ஓர் இரக்கச் செயல்தான்.

பிறரது குற்றங்களை மன்னிப்பது என்பது மிகக் கடினமானதுதான். ஆனால், நானும் என் தந்தையும் உன்னை மன்னித்துக் கொண்டிருப்பதால்தான் நீ இன்னும் நலமாய் இருக்கிறாய் என்பதை மறந்து விடாதே. மன்னிப்புப் பெறுபவனாய் நீ இருப்பதனால் மன்னிப்பு அளிப்பவனாகவும் இருந்தே ஆக வேண்டும். பழிக்குப்பழி என எல்லோரும் நினைத்தால் இந்த உலகில் அமைதிக்கே இடமில்லாமல் போய்விடும். ஒரு காயத்தை இன்னொரு காயத்தால் ஆற்ற முடியாது.

காயத்திற்கான மருந்து எது என்பதை வெரோனிக்கா நன்றாகவே அறிந்திருந்தாள். என் முகத்தில் இருந்தது அவளால் ஏற்பட்ட காயம் அல்ல. ஆனாலும் காயத்தை ஏற்படுத்தியவர்கள் மீது கோபம் கொள்வதைவிட எனக்கு ஆறுதல் தந்து என் காயத்தின் வேதனையைக் குறைப்பதுதான் சிறந்தது என எண்ணி என் திருமுகத்தைத் துடைக்கிறாள். காயத்தை ஆற்றுவதற்கான மருந்தை நீயும் தேடு. அது மன்னிப்புதான். நீ குற்றம் செய்திருந்தால் மன்னிப்புக் கேள். பிறர் உனக்கெதிராக குற்றம் செய்திருந்தால் அவர்களை மன்னித்துவிடு. யார் முதலில் மன்னிப்புக் கேட்பது என்கிற கேள்வி எழும். நீ தொடங்கு. அப்போது வெரோனிக்காவைப்போல நீ என்னை பிரதிபலிப்பாய்.

## செபம்

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எங்களுக்குத் தாரும்.

**"சிறியோருள் ஒருவருக்கு... ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார்."**
**(மத். 10:42)**

# தவித்தவராய் இயேசு

நாவறண்டு போனவராய், இரண்டாம் முறை தள்ளாடி விழுந்த இயேசு பேசுகிறார்:

சிலுவைப் பாதையின் போது நான் அனுபவித்த பல பாடுகளை தியானிக்கிற நீ 'நான் தாகத்தால் தவித்தேன்' என்பதை பன்னிரண்டாம் தலத்தில் தான் நினைக்கவே செய்கின்றாய். ஆனால் பாதை முழுவதும் நான் தாகத்தால் தவித்தேன். மருத்துவ மொழியில் சொல்ல வேண்டுமென்றால் எனக்கு "dehydration - நீரிழப்பு" ஏற்பட்டிருந்தது. நீர்ச்சத்து வற்றிப் போயிருந்த எனக்கு ஒரு வாய்த் தண்ணீர் கொடுக்க யாருமில்லை. சிலுவையின் பாரம் என்னை அழுத்த, தாகம் என் தொண்டையை வாட்ட, இரண்டாம் முறை நான் தரையில் விழுந்தேன்.

என் மகனே! மகளே! தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுத்த அனுபவம் உனக்கு உண்டா? கோடை காலத்தில் காலிக் குடங்களோடு தண்ணீருக்கு அலைமோதும் மக்களைப் பார்த்து நீ பரிதாபப்பட்டதுண்டா? நாள்தோறும் நீ உண்ணும் உணவை விளைவிக்கும் விவசாயி மழை பொய்த்துப் போகிற போது படுகிற துன்பம் உன் மனதை பாதித்ததுண்டா? அவர்களது போராட்டங்களில் நீ என்றைக்காவது பங்கெடுத்ததுண்டா? தண்ணீர் பஞ்சம் என்பது இயற்கையின் சதியல்ல; இயற்கையைப் பேணுகிற கடமையிலிருந்து தவறிய நாம் அதற்குக் கொடுக்கிற விலை. "தாகத்தால் தவிப்போர்க்கு தண்ணீர் கொடுத்தல்" என்கிற இரக்கச் செயல் மனிதர்கள் பருகுவதற்கு தண்ணீர் கொடுப்பதோடு நின்று விடும் ஒன்றல்ல. செடிகளுக்கு நீர் பாய்ச்சாமல், தாவரங்களை வளர்க்காமல், மரங்களைப்

பேணாமல் இயற்கைக்கு எதிராக செய்கிற குற்றங்களும் கணக்கில் எடுக்கப்படும். எனவே, தவித்த வாய்க்கு தண்ணீர் கொடு; வீழ்ந்து விட்டச் சுற்றுச்சூழலை சீர்படுத்து. அதே சமயம் அன்புக்காக, சுதந்திரத்திற்காக, மனித மாண்புக்காக ஏங்கித் தவிப்போரின் தாகத்தைத் தணிக்கவும் ஏதாவது செய்.

**செபம்**

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

◆

## ✦ எட்டாம் நிலை

**“நீ இவைபற்றிப் பேசு; முழு அதிகாரத்தோடும் அறிவுறுத்திக் கடிந்து கொள்.” (தீத்து. 2:15)**

# அறிவுறுத்தும் இயேசு

தமக்காக அழுகிற எருசலேம் மகளிரை ஆறுதல் படுத்தி, அறிவுறுத்திய இயேசு நம்மோடு பேசுகிறார்:

எருசலேம் மகளிருக்கு நான் சொன்ன அறிவுரை மிகவும் எதார்த்தமானது. அவர்கள் விளைவுகளைக் கண்டு கண்ணீர் வடித்தனர்; காரணங்களைத் தேட முனையவில்லை. எனக்கு நேர்ந்ததைக் குறித்து கண்ணீர் வடித்தார்களேத் தவிர அதற்குக் காரணமான மனித குலப் பாவங்களைக் குறித்து வருந்தவில்லை. எனவேதான் “உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளின் பாவங்களுக்காகவும் அழுங்கள்” என்றேன். வலியும் வேதனையும் நிறைந்த அந்த நேரத்திலும் அவர்களது அறியாமை இருளை அகற்ற ஒரு முயற்சி செய்தேன்.

அறியாமையில் உழல்வோருக்கு அறிவு புகட்டுவது என்பது உளம் சார் இரக்கச்செயல் என்பது உனக்குத்தெரியுமா? உன் மத்தியில் அறியாமையில் வாடுவோரை நீ கவனித்ததுண்டா? “எல்லாம் எனக்குத் தெரியும்” என நினைக்கின்ற நீயே

பல விஷயங்களில் இன்னும் அறியாமையில்தான் உழல்கின்றாய். எனது கட்டளைகள், திரு அவையின் போதனைகள், ஒழுங்குமுறைகள், விசுவாசக் கோட்பாடுகள், நிலைவாழவுக்கான நியமங்கள் - இவை குறித்தத் தெளிவு உன்னிடம் உண்டா? இவை குறித்து உன் குழந்தைகளிடம் பேசியதுண்டா? திருஅவை பற்றியும், கத்தோலிக்க விசுவாசம் பற்றியும், நன்னெறி வாழ்வு பற்றியும், உரிய காலத்தில் அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தால் பின்நாட்களில் கண்ணீர் வடிக்கின்ற சூழ்நிலைகள் வந்திருக்காது. இன்றைய அவல நிலைக்காக அழுவதை நிறுத்திவிட்டு, கடந்தகால அறியாமைக்காக வருந்து. இனியாவது அறிந்து கொள்ளவும், அறிவுறுத்தவும் முயற்சி செய். வலமும், இடமும் பார்ப்பதைக் காட்டிலும் உன்னையும் உன் குடும்பத்தையும் முதலில் பார். அறிவுத் தெளிவு கொள். அதன்பின் மற்றவரையும் அறியாமை இருளினின்று அறிவொளிக்கு அழைத்து வர முயற்சி செய்.

**செபம்**

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

◆

## ✦ ஒன்பதாம் நிலை

**“முழு ஞானத்தோடு ஒருவருக்கு ஒருவர் கற்பித்து அறிவுரை கூறுங்கள்.” (கொலோ. 3:16)**

# நம்பிக்கையிழக்காத இயேசு

மூன்றாம் முறை விழுந்தாலும் நம்பிக்கையிழக்காமல் எழுந்து நடந்த இயேசு பேசுகிறார்:

என் மகனே! மகளே! இவ்வுலகில் பாவம் என்கின்ற உணர்வே அற்றுப்போவதுதான் பாவங்கள் பெருகுவதற்கான அடிப்படைக்காரணம். எனவேதான் “பாவிகளை

நல்வழிப்படுத்துவது" என்பது உளம்சார் இரக்கச் செயலாக திருஅவையால் கற்பிக்கப்படுகிறது. ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள். நல்வழிப்படுத்துவது என்பது வேறு; தீர்ப்பிடுவது என்பது வேறு. கீழே விழுந்த என்னைத் தூக்கி விடுவதற்குப் பதிலாக அடித்துத்துன்புறுத்திய வீரர்களைப் போல, நீயும் பல நேரங்களில், பாவத்தில் தவறி விழுவோருக்கு நம்பிக்கையூட்டி தூக்கி விடுவதற்குப் பதிலாக, அவர்களைத் தீர்ப்பிட்டு, சிறுமைப்படுத்தி எழ முடியாமல் செய்கிறாய்.

மற்றவர்களது நலம் குறித்த எந்த அக்கறையும் இல்லாமல் அவர்களது குறைகளைப்பற்றி விமர்சிப்பதும், புரணி பேசுவதும் தீர்ப்பிடுவதற்குச் சமம். கரிசனையோடு அடுத்தவர்களை திருத்த நினைப்பதுதான் நல்வழிப்படுத்துதல். பாவத்தை வெறுக்கும் நான் பாவிகளை வெறுப்பதில்லை என்பதை மறந்துவிடாதே. திருத்தப்பார்; யாரையும் தீர்ப்பிடாதே. சில சமயங்களில் நீ உன்னையே கூட நல்வழிப்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக தீர்ப்பிட்டுக் கொள்கிறாய். செய்த பாவத்தையே திரும்பத் திரும்பச் செய்கின்றபோது, நம்பிக்கையிழந்து "எனக்கு விமோச்சனமே இல்லை" என வீழ்ந்து போகிறாய்.

மூன்றுமுறை விழுந்தாலும் நம்பிக்கை இழக்காத என்னைப்பார். நான் என் மீது மட்டுமல்ல, உலகின் மீதும் இன்றும் நம்பிக்கை இழக்கவில்லை. பாவிகள் நல்வழிப்படுத்தப்படுவர் என உறுதியாய் நம்புகிறேன். நீயும் நம்பு. உன்னையும் பிறரையும் நல்வழிப்படுத்த முயற்சி செய்.

## செபம்

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

◆

**“உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும்... நான் விரும்பும் நோன்பு.”**

**(எசா. 58:7)**

# ஆடையிழந்த இயேசு

ஆடையிழந்து அவமானப்பட்டு நிற்கும் இயேசு பேசுகிறார்:

என் மகனே! மகளே! நான் ஆடையின்றி நிற்கிற காட்சி உன்னை ஆத்திரப்பட வைக்கிறதல்லவா? நன்று! ஆனால் ஆடையின்றியும், அரைகுறை உடையுடனும், கிழிந்துபோனத் துணிகளுடனும், தெருவில் வாடுவோரைக் கண்டு நீ மனமிரங்கிய தருணங்கள் உண்டா?

யாருக்கெல்லாம் ஆடையில்லை எனக்கண்டறிய நீ தெருத்தெருவாய் அலைய வேண்டிய அவசியமில்லை. ஆலய வாசலிலே அரைகுறை உடையுடன் பிச்சை எடுப்போரையும், ஓட்டைகளும், ஒட்டுகளும் நிறைந்த சீருடையுடன் பள்ளிக்குச் செல்லும் ஏழைக்குழந்தைகளையும் நீ பார்த்ததில்லையா என்ன? இவர்களில் யாருக்காவது, என்றைக்காவது ஆடையணிவித்து மகிழ்ந்திருக்கிறாயா?

பல ஆண்டுகளாய் அலமாரியில் கிடக்கும் நைந்துபோன பழைய உடையை யாருக்காவது கொடுத்தாலே, அதைப் பெரியதொரு இரக்கச் செயலாக நம்மில் சிலர் நினைத்துக்கொள்கிறோம். முன்பின் தெரியாத ஒரு ஏழைக்கு புத்தாடை வாங்கிக் கொடுத்து, அதனால் அவர் முகத்தில் பூக்கும் புன்னகையைப் பார்த்த அனுபவம் உனக்கு உண்டா? அந்தப் புன்னகையில் நான் மறைந்திருக்கிறேன் என்பதை நீ உணர்ந்ததுண்டா?

விலையுயர்ந்த உடையை உனக்காக வாங்குகிற போது, ஒரு ஏழைக்கும் உடை வாங்கும் பழக்கத்தை நீ

ஏற்படுத்திக் கொண்டால் அதுவே இத்தலத்தில் ஆடையின்றி நிற்கும் எனக்கு பெரும் ஆறுதலாய் இருக்கும். ஒவ்வொரு முறையும் இல்லையென்றாலும் வருடத்திற்கு ஒருமுறையாவது "உடையிழந்தோருக்கு உடைகொடுத்தல்" என்னும் இரக்கச் செயலை நீ செய்யத் தொடங்கு. அதே வேளையில், சாதியின் பெயராலும் சமூக நிலையைக் காரணம் காட்டியும் உரிமைகள் உரியப்பட்டு மாண்பிழந்து நிற்போரையும் மனித மாண்பால் உடுத்தி அழகு பார்.

## செபம்

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

◆

## ✦ பதினொன்றாம் நிலை

**"தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும்... நான் விரும்பும் நோன்பு."**

**(எசா. 58:7)**

# அறையுண்டவராய் இயேசு

கழுமரந்தனில் கட்டுண்டு, ஆணிகளால் அறையப்பட்டவராய் இருக்கும் இயேசு பேசுகிறார்:

என் மகனே! மகளே! தங்குமிடம் ஏதுமின்றி இதுவரை சுற்றித் திரிந்தேன் நற்செய்தியை அறிவிக்க. கடைசியில் சிலுவை எனக்கு தொங்குமிடமாய் அமைகிறது. என்னைச் சிலுவையில் அறைகிறார்கள். நான் இருக்க வேண்டிய இடம் சிலுவை அல்ல என்பது உனக்கு நன்றாகவேத் தெரியும். அதனால் பதறுகிறாய். ஆனால் தங்குவதற்குத் தகுதியே இல்லாத இடங்களில் தவித்துக் கொண்டிருப்போரைப் பார்த்து நீ பரிதவித்ததுண்டா?

போர்களாலும், வன்முறைச் செயல்களாலும் வீடிழந்து, அகதிகளாகவும், நாடோடிகளாகவும் திரிகிற புலம் பெயர்ந்தவர்களைக் குறித்து நீ கவலைப்பட்டதுண்டா? முன்பின் தெரியாதவர்களை வீட்டிற்குள் அழைத்துத் தங்க வைப்பது என்பது நாம் வாழும் இக்காலக்கட்டத்தில் முடியாத காரியம். தீவிரவாதிகள் எப்படியெல்லாம் ஊடுருவ முடியும் என சதித்திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிற இன்றையச் சூழலில் அறிமுகமில்லாதவர்களுக்கு உறைவிடம் தருவது முட்டாள்தனமான ஒரு செயலாகவும், ஆபத்தான ஒன்றாகவும் கூட இருக்கலாம். ஆனால், உன் கண்ணெதிரே வாழ்ந்தவர்கள், புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் அனைத்தையும் இழந்து தெருவிற்கு வந்ததை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா? அவர்கள் மீண்டும் தங்கள் உறைவிடத்தைக் கட்டியெழுப்ப நீ உதவி செய்ததுண்டா? ஏழைகள் தங்கள் குடிசையை சீரமைத்துக் கொள்ள சிறு துரும்பையாவது நீ கொடுத்ததுண்டா? தங்குமிடமின்றி அவர்கள் தவிக்கும் போதெல்லாம், சிலுவை என்கிற மரச்சட்டத்துக்குள் என்னை அறைந்து வைப்பது போல் தான் உணர்கிறேன்.

வீடற்றோருக்கு வீடு கொடுப்பதும், முகவரி அற்றோருக்கு முகவரி கொடுப்பதும் உடல்சார் இரக்கச் செயல்களுள் ஒன்று. சிலுவையில் தொங்கும்போதுகூட “இன்றே வான்வீட்டில் என்னோடு இருப்பாய்” என நல்ல கள்வனுக்கு வீடு பேற்றினை அளித்தவன் நான். நீ என் சீடன் என்பது உண்மையானால், இவ்வுலகிலும் மறு உலகிலும் வீடு பேற்றினை உறுதி செய் - உனக்கும் மற்றவர்க்கும்.

## செபம்

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

◆

"ஒருவரை ஒருவர் தேற்றிக் கொள்ளுங்கள்" (1.தெச.4:18)

# துயருறும் இயேசு

**தம் உயிரைத் துறக்கின்ற துயரத்தின் உச்சியிலிருந்து இயேசு பேசுகிறார்:**

என் மகனே! மகளே! பாவமே அறியாத நான் பாவமும் சாபமும் ஆனேன். சிலுவையில் பரிகாரப் பலியானேன். உன்மீது விழ வேண்டிய தண்டனையை நான் ஏற்றுக் கொண்டதற்கும், உன்னைச் சுகமாக்கும் தழும்புகளை நான் சுமந்து கொண்டதற்கும் ஒரே காரணம், உன்னை துயரினின்று விடுவிக்கவே. உன்னைச் சுற்றியிருப்போரின் துயரை நீ கவனித்திருக்கிறாயா? அவர்களுக்கு ஆறுதலாய் ஏதாவது சொல்லியிருக்கிறாயா? செய்திருக்கிறாயா? "துயருற்றோருக்கு ஆறுதல் அளித்தல்" என்பது ஒரு உளம் சார் இரக்கச் செயல் என்பதை நினைவில் கொள்.

"நான் அனுபவிக்கும் துயருக்கே அளவில்லை; இதில் நான் எப்படி மற்றவர்களுக்கு ஆறுதல் அளிப்பது?" என நீ புலம்புவது எனக்குக் கேட்கிறது. என்னைப் பார். சாகும் தருவாயிலும் என் சிந்தனைகள் மற்றவர்களைப் பற்றியே இருந்தன. என்னைத் துன்புறுத்தியவர்களுக்காக மன்னிப்பு வேண்டினேன். என் அன்புச் சீடனையும், என் அன்னையையும் ஒருவருக்கொருவர் ஆதரவாய் அளித்தேன். மனம் வருந்திய கள்வனுக்கு வான் வீட்டை உறுதி செய்தேன். அப்போதுகூட மனுக்குலத்தின் மீட்புக்காகத் தாகம் கொண்டிருந்தேன். எனது கடைசித் துளி இரத்தத்தை சிந்தும் வரை நான் மற்றவர்களின் துயர் துடைப்பதிலேயே கருத்தாய் இருந்தேன்.

என் சிலுவைச் சாவின் வழியாக மீட்கப்பட்டுள்ள நீ துயருறுவோருக்கு ஆறுதலாய் இருக்கப் பழகு. இந்த உலகில் துன்பத்தின் வடிவங்கள் ஏராளம்; துயருறுவோரின்

எண்ணிக்கையும் ஏராளம். ஆனால் ஆறுதல் அளிப்பவர்கள் மிகவும் சொற்பப் பேர். துயருறுவோருக்கு ஆறுதலாகவும், இன்னலுற்றோருக்கு ஈடேற்றமாகவும் அமைகிற என் சிலுவையைப் பார். இரக்கத்தின் செயல்கள் புரிய இனிய இதயம் பெறுவாய்.

### செபம்

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

## ✦ பதின்மூன்றாம் நிலை

**“துன்பத்தில் தளரா மனதுடன் இருங்கள்; இறை வேண்டலில் நிலைத்திருங்கள்.” (உரோ. 12:12)**

# அமைதியாகிப் போன இயேசு

**சிலுவையில் இருந்து இறக்கப்பட்டு, அன்னை மரியாவின் மடியில் அமைதியில் உறங்கும் இயேசு பேசுகிறார்:**

என் மகனே! மகளே! மரணம் கொடுமையானது. அதிலும் நாம் மிகவும் நேசித்த ஒருவரை மரணம் பறிக்கிறபோது அது ஈடுசெய்ய முடியாத இழப்பாகிப் போய்விடுகிறது. என் அன்னை ஏற்கனவே கணவனை இழந்த விதவை. இப்போது தனது ஒரே மகனாகிய என்னையும் இழந்து தவிக்கின்றார். அவருக்கு ஆறுதல் சொல்லி, அவரைத் தேற்றுவிக்க எத்தனை பேர் அருகிருந்தனர் என்பது உனக்குத் தெரியும்.

சோகத்தில் தத்தளிக்கும் மனிதர்களை நீ சந்தித்ததுண்டா? அவர்களோடு நேரம் செலவழித்ததுண்டா? அவர்களுக்காக செபித்ததுண்டா? குறைந்த பட்சம் உன்னிடம் செபிக்கச் சொன்னவர்களுக்காகவாவது நீ செபித்ததுண்டா? வாழ்வோருக்காகவும், இறந்தோருக்காகவும் வேண்டுதல் செய்வது என்பது ஆன்மீக இரக்கச் செயல் என்பதை நினைவில் இருத்து. இந்த இரக்கச் செயலை எல்லோராலும் செய்ய முடியும். வயதில் சிறியவரோ, பெரியவரோ, வசதிகள்

உள்ளவரோ, இல்லாதவரோ, பதவியில் உயர்ந்தவரோ, தாழ்ந்தவரோ - யார் வேண்டுமானாலும் செபிக்கலாம். ஆனால் அதைச் செய்யத்தான் பலருக்கு மனம் வருவதில்லை.

வாழ்வோராவது பரவாயில்லை. அவர்கள் தங்களுக்காக வேண்டிக் கொள்ள முடியும். இறந்தவர்களின் நிலை கையறு நிலை. அவர்கள் தங்களுக்காகக்கூட செபிக்க முடியாது. பிறரது செபங்கள்தான் அவர்களது ஒரே நம்பிக்கை. ஆனால் இறந்தவர்களுக்காக செபிப்பதில் எவ்வளவு அசட்டைத் தனமாக இருந்திருக்கின்றாய். உன் குடும்பத்தில் மரித்தவர்களுக்காகக்கூட நீ செபிப்பதில்லையே! “இறப்பின் வேளையில் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்” என என் அன்னையை நோக்கி மன்றாடுகிற நீ பிறருக்காக செபிக்கிற பழக்கத்தை உருவாக்கிக் கொள். வாழ்வோருக்காகவும், இறந்தோருக்காகவும் வேண்டுதல் செய். பன்மடங்கு ஆசீர்வாதத்தை உன் வாழ்வில் காண்பாய்.

**செபம்**

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

◆

## ✦ பதினான்காம் நிலை

**“இறந்தோர் சிறந்த கைம்மாறு பெறுவர் என்பது இறைப்பற்றை உணர்த்தும் தூய எண்ணமாகும்.”**

**(2. மக்க 12 :45)**

# கல்லறையில் இயேசு

**மாற்றான் கல்லறையில் மவுனமாய் உறங்கும் இயேசு நம்மோடு பேசுகிறார்:**

என் மகனே! மகளே! “என் தந்தையின் இல்லத்தில் உறைவிடங்கள் பல உண்டு. உங்களுக்காக ஒன்றை ஏற்பாடு

செய்யவே, நான் முன்பே செல்லுகிறேன்'' என்று சொன்ன இயேசு தம் தந்தையிடம் சென்றுவிட்டார். அதைப்போலவே நீ நேசிக்கும் எல்லோரும், நேசிக்காதவர்களும்கூட ஒருநாள் செல்வர். ஆனால், தாங்கள் இறந்து போகும்போதுகூட தங்கள் அருகில் ஒருவரும் இல்லாமல் இறப்பவர்கள் இருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா? ஏதோ நான் பரம ஏழைகள் குறித்தும், சாலையோர பிச்சைக்காரர்கள் குறித்தும் மட்டும் பேசுகிறேன் என்று நினைக்காதே!

இன்றைய நவீன உலகில், பணம் படைத்த பலர் கூட தங்கள் மரணத்திற்குப்பின் மார்ச்சுவரியில் - அமரர் அறைகளில் நாள் கணக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது, வெளி நாட்டில் இருக்கும் தங்கள் மகனோ, மகளோ வருவதற்கு. தங்களது அந்திம நாட்களில் தனித்துவிடப்பட்ட அவர்கள், ஆவியைத் துறந்த பின்னும் தனிமையில் விடப்படுகின்றனர்.

முற்காலத்தில் ''இறந்தோரின் உடலை அடக்கம் செய்வது'' என்பது உடல்சார் இரக்கச் செயல்களில் இன்றியமையாத ஒன்றாக இருந்தது. இன்றைய காலக்கட்டத்தில் அதன் அவசியம் குறைந்திருக்கலாம். ஆனால், வயோதிகக் காலத்திலும் மரணத் தருவாயிலும் தனித்துவிடப்படுதல் என்பது கொடுமையிலும் கொடுமை. முதியோர் இல்லங்களில் தங்கள் பெற்றோரை அனுமதித்துவிட்டு, கட்டணத்தைச் செலுத்தி விட்டால் கடமை முடிந்ததென்று நினைப்போரை நினைத்தால் என் நெஞ்சம் பதறுகிறது.

பிரிவால் வாடும் குடும்பத்தாரோடு நீ செலவு செய்யும் ஒவ்வொரு நிமிடமும், செய்கிற ஒவ்வொரு ஒத்தாசையும், அவர்களது துயரில் பங்குபெறும் உடனிருப்பும் ''இறந்தோரை அடக்கம் செய்தல்'' என்கிற இரக்கச் செயலுக்கு இணையானவைதான்.

அரிமத்தியா ஊரைச் சார்ந்த சூசையும், நிக்கோதேமுவும், நான் மரித்தபின் எனக்குக் காட்டிய அன்பும் மரியாதையும் என்னைக் குளிர்வித்தன. நீயும் உன் இரக்கச் செயலால் என்னை குளிர்விப்பாயா?

### செபம்

இரக்கத்தின் ஆண்டவரே! இரக்கம் நிறை இதயத்தை எனக்குத் தந்தருளும்.

### முடிவுரை

நாம் கடந்து வந்த இந்தப் பதினான்கு நிலைகளிலும் இயேசு நம்மோடு உரையாடியதை உணர்ந்திருப்போம். பசித்தோருக்கு உணவளித்தல், தாகத்தால் தவிப்போருக்கு குடிக்கத் தண்ணீர் கொடுத்தல், ஆடையற்றோருக்கு ஆடை கொடுத்தல், வீடற்றோருக்கு தங்கும் இடம் தருதல், நோயுற்றோரைச் சந்தித்தல், சிறையில் வாடுவோரைக் காணச் செல்லுதல், இறந்தோரை அடக்கம் செய்தல் ஆகிய ஏழு உடல்சார் இரக்கச் செயல்கள் குறித்தும்; அறியாமையில் வாடுவோருக்கு அறிவு புகட்டல், ஐயமுற்றோரை ஆற்றுப்படுத்துதல், பாவிகளுக்கு நல்வழிகாட்டுதல், நமக்கு இழைக்கப்பட்ட தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல், பிறரது குற்றங்களை மன்னித்தல், துயருறுவோருக்கு ஆறுதல் அளித்தல், வாழ்வோருக்காகவும், மரித்தோருக்காகவும் செபித்தல் ஆகிய ஏழு ஆன்மீக இரக்கச் செயல்கள் குறித்தும் இயேசு நமக்கு நினைவூட்டினார். இவை சின்னஞ்சிறிய செயல்களாய் இருக்கலாம். ஆனால், இவைத் திண்ணமாய் நம்மை வான் வீட்டில் சேர்க்கும். ஏனெனில் “மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்” (மத். 25:40) என இயேசுவே உறுதிபடக் கூறியுள்ளார். இத்தகைய இரக்கச் செயல்களை வாழ்வில் நாம் மேற்கொண்டால், வாழ்வின் இறுதியில் “என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள்... ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள்” (மத். 25:34) என்கிற ஆண்டவரின் அருள்மொழியை நிச்சயமாய்க் கேட்போம்.

◆